**கவனிக்க.**-2018.11.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2097 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

2097 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2334 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2340 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு

### சட்ட அதிகாரி (நிறைவேற்று அதிகாரசேவையில் III ஆம் தரம்) பதவிக்காக திறந்த முறையில் இணைத்துகொள்ளல்

*மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சின் சட்ட அதிகாரி பதவிக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* **இணைத்துக்கொள்ளும் முறை** .- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்ப தாரிகளில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் முடிவின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற பிரதிநிதி, பதவி வெற்றிடத்திற்கு அமைய இணைத்துக் கொள்ளப்படுவர். அதன் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட (இல. 06 இன் கீழ்) புள்ளி முறைக்கமைய கட்டமைப்பு நேர்காணல் இடம்பெறும்.

*2.* **தகைமைகள் :**

i. *கல்வி/தொழில் தகைமை.*- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சட்டம் தொடர்பிலான பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் வழங்கி இருத்தல்.

ii. *அனுபவம்.*- இலங்கை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் வழங்கியதன் பின்னர் மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாது குறித்த துறையில் தொழில் அனுபவம் பெற்றிருத்தல்.

iii. உடல் தகைமை.- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரியும் வகையில் சிறந்த மனநிலையை மற்றும் உடல் நிலைமையைக் கொண்டிருத்தல்.

iv. *ஏனைய தகைமைகள்* :
- இலங்கைப் பிரசையாக இருத்தல்.
- விண்ணப்பதாரர் சிறந்தபழக்கவழக்கமுடையவராக இருத்தல்.
- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் அனைத்து தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

*3.* **சேவையில் ஈடுபடுத்தல் கொள்கை மற்றும் சேவை விதிமுறைகள் :**

i. இப் பதவி நிரந்தரமானது;

ii. இந்த பதவி ஓய்வூதியம் உள்ளது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டவராயிருத்தல். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் தபுதாரர்கள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தால் மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பங்களிப்பு வழங்கப்பட வேண்டும்.

iii. இந்த நியமனமானது 03 வருட பயிற்சிக்காலத்தை உள்ளடக்கியது. சட்ட அதிகாரி III தரத்திற்கு இணைத்து மூன்று வருட காலப்பகுதியில் இணைத்துக் கொள்ளல் விதிமுறையின் படி முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும்.

iv. 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் அதன் இணைப்பு சுற்றறிக்கைகளின் அடிப்படையில் இந்த நியமனத்தை பெற்றுகொண்ட தினம் தொடக்கம் ஐந்து வருட காலம் பூர்த்தி அடைய முன்னர், குறித்த அரசமொழித் தேர்ச்சியை பெற்றிருத்தல் அவசியம்.

v. இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணி விதி முறைகள் மற்றும் மின் வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சின் சட்ட அதிகாரி இணைத்துக் கொள்ளல் விதி முறைகளுக்கு உட்பட்டதாகவும், மேற்கொள்ளப்படும் கொள்கை திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாகும்.

*4.* **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் குறைந்தது 21 வயதுடைய வர்களாகவும் 45 வயதை விஞ்சாதவர்களாகவும் இருத்தல் அவசியம்.

5. **சம்பள மட்டம்** .- 2016.02.25 ஆந் திகதி 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் உப பாகம் I இற்கமைய குறித்த மாதாந்த சம்பளம் 47,615-10×1,335-8×1,630-17×2,170-ரூபா 110,895 (SL-1-2016) மாதாந்த சம்பளம் வழங்கப்படும். குறித்த சுற்றறிக்கையின் II இற்கமைய குறித்த சுற்றறிக்கையின் விதிமுறைகளின் படி தங்கள் சம்பளம் செலுத்தப்படும்.

6. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும் :

| இல. | விடயம் | | அதிக பட்ச புள்ளி |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமை :**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சட்டம் தொடர்பிலான பட்டம்<br>- முதற் தரத்தில் சித்தி அடைதல்<br>- இரண்டாம் தரத்தில் சித்தி அடைதல்<br>- மூன்றாம் தரத்தில் சித்தி அடைதல்<br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதல் தரத்தில் சித்தி பெறல்<br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் தரத்தில் சித்தி பெறல்<br><br>**குறிப்பு** – கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவராயின் 10 புள்ளிகள் மாத்திரமே பெற்று கொடுக்கப்பட வேண்டும்.<br>(உயர் தகைமைக்காக மாத்திரமே வழங்கப்பட வேண்டும் - பட்டம் மற்றும் சட்டக் கல்லூரி தகைமைகளில் ஏதேனும் ஒன்றிற்கு மாத்திரமே.) | <br><br>15<br>12<br>10<br>15<br>10 | 15 |
| 02 | **மேலதிக தொழிற் தகைமை (அதிகூடிய புள்ளி) :**<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் குறித்த துறை தொடர்பிலான ஒரு வருடத்திற்கு குறையாத பட்டப்பின் டிப்ளோமா அல்லது பட்டப்பின் சட்டம் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி (ஒரு டிப்ளோமாவிற்கு 05 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பெற்றுக் கொடுக்கப்படும் குறித்த துறை சார் 06 மாதத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறி (ஒரு டிப்ளோமாவிற்கு 03 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பெற்றுக் கொடுக்கப்படும் குறித்த துறை சார் 03 மாதத்திற்கு குறையாத சான்றிதழ் ரீதியான பாடநெறி (ஒரு டிப்ளோமாவிற்கு 02 புள்ளிகள் வீதம்) | | 20 |
| 03 | **மேலதிக அனுபவம் :**<br>சட்ட வழக்கறிஞராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் -<br>- ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்ச புள்ளி 20<br>- 06 மாதங்களுக்கு அதிகமான ஒரு வருடத்திற்கு குறையாத – 02 புள்ளிகள்<br>(அடிப்படை தகுதியை அடைதல் தொடர்பில் தேவையான சட்ட வழக்கறிஞராக 03 வருட சேவைக்காலம் தவிர்த்து)<br>(20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்த சட்டத்தரணியாக அல்லது சனாதிபதி சட்டத்தரணியாக அல்லது நீதிபதியாக பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதி செய்யப்பட வேண்டும்.) | | 20 |

(தொடர்ச்சி)

| இல. | விடயம் | | அதிக பட்ச புள்ளி |
|---|---|---|---|
| 04 | **மொழித் திறன்** - ஆங்கில மொழித் திறன் :<br>ஆங்கில மொழி மூலம் மேற்கொள்ளப்பட்ட முதுநிலை பட்டம்/ பட்டம்/ சட்டம் தொடர்பிலான பட்டம்/ சட்ட முதுநிலை பட்டம்<br>(குறித்த பரீட்சை வினாத்தாள் அனைத்தும் ஆங்கில மொழியில் விடையளித்து இருத்தல்) | 15 | 20 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி)<br>(01 வருடம் அல்லது 1500 மணித்தியாலம்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பிலான சான்றிதழ் பாடநெறி)<br>- 06 மாதம்/ 720 மணித்தியாலம் | 07 | |
| | - 03 மாதம்/ 360 மணித்தியாலம் | 05 | |
| 05 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான அறிவு** :<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழக பட்டம் | 20 | 20 |
| | தகவல் தொழில்நுட்பத்தை பிரதான விடயமாக தெரிவு செய்திருத்தல்<br>அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 1 வருடத்திற்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி அல்லது 1500 மணித்தியாலம் | 10 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான சான்றுப் பத்திர பாடநெறி<br>- 06 மாதம்/ 720 மணித்தியாலம் | 07 | |
| | - 03 மாதம்/ 360 மணித்தியாலம் | 05 | |
| 06 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்பட்ட திறமை, தலைமைத்துவம், திடகாத்திரம், தொடர்பாடல் திறன். | | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

6. **விண்ணப்பதாரிகளின் தேவைப்பாடு**.- எல்லாவித தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதி மற்றும் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை சான்றுபடுத்த கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

I. ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளரால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை;
II. அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பம் சமர்ப்பித்தல்**

I. விண்ணப்பங்கள் 2018.11.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். குறித்த தினத்திற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு,
இல. 72, ஆனந்தகுமார சுவாமி மாவத்தை,
கொழும்பு – 07

II. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அதிகாரி பதவிக்காக விண்ணப்பித்தல்" என குறிப்பிடவேண்டும்.

III. விண்ணப்பத்தில் வேட்பாளரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பொலிஸ் துறையில் பணிபுரியும் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பதவி ஏற்ற அதிகாரி அல்லது ரூ.47,615 இற்கு அதிகமான மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர அதிகாரி ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

IV. தற்போது அரசசேவையில் அல்லது மாகாண அரசசேவையில் ஈடுபடுவோராயின் தாம் பணிபுரியும் திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

V. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப் பெறல் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்ப படிவத்தில் 22 – 29 செ.மீ. அளவிலாள A4 கடதாசியில் தயாரித்து 01 தொடக்கம் 03 வரை முதல் பக்கத்திலும், மீதியை முறையாக அடுத்த தாளிலும் நிரப்பவேண்டியதுடன் இரு பக்கங்களிலும் தமது கையெழுத்தில் தெளிவாக விண்ணப்பம் நிரப்பப்படவேண்டும்.

VI. கட்டமைப்பு நேர்காணலுக்கான கடிதம் விண்ணப்பதாரியின் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப் படும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்.**- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வித தகவலும் பொய்யானதாகவோ அல்லது தவறானதாகவோ நியமிக்கப்பட முன்னர் இனங்காணப்பட்டால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறு பொய்யான, தவறான தகவல்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்டால் அதற்குரிய செயற்பாடுகளின் படி சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடத்தை நிரப்புதல் தொடர்பிலான உரிமை அரச சேவை ஆணைக்குழுவை சார்ந்ததேயாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு.

மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு,
இல. 72, ஆனந்த குமார சுவாமி மாவத்தை,
கொழும்பு– 07.

மாதிரி விண்ணப் படிவம்

**மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு**
**நிறைவேற்று அதிகார வகுதி - சட்ட அதிகாரி III தரத்திற்கு இணைத்துகொள்ளல்**
**கட்டமைப்பு நேர்காணல் - 2018**

**Executive Service Category – Structured Interview for Recruitment to the Post of Legal Officer Grade III -2018**

(தரப்பட்டுள்ள அடைப்பில் சரியான குறியீடு/இலக்கம் தெளிவாக குறிப்பிடவும்)

[ ]
அலுவலக உபயோகத்திற்காக

கட்டமைப்பு நேர்காணலுக்கான மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(சரியான இலக்கத்தை அடைப்பில் எழுதவும்)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

1.2 இறுதியில் வரவேண்டிய பெயரை முதலில் குறிப்பிட்டு ஏனைய முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உதாரணம் : GUNAWARDENA, H.M.S.K)

1.3 முழுப்பெயர் :----.
(தமிழில் அல்லது சிங்களத்தில்)

1.4 ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

2.2 நிரந்தர முகவரி :----.
(தமிழில் அல்லது சிங்களத்தில்)

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

3.0 3.1 ஆண்/பெண் : பெண் - 1 ஆண் - 0 ☐
(சரியான இலக்கத்தை அடைப்பில் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 2018.11.30 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 கல்வித் தகைமை
பட்டம் அல்லது நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் வழங்கல் தொடர்பில் கல்விச் சான்றிதழ் தொடர்பிலான விபரம் மற்றும் வழங்கப்பட்ட திகதி :

(i) பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனம் :----.
(ii) பட்டம் அல்லது சான்றிதழின் பெயர் :----.
(iii) பட்டம் அல்லது சான்றிதழ் அனுமதிக்கப்பட்ட திகதி :----.
(iv) தரம் :----.

5.0 சட்டத் துறையில் பெறப்பட்டுள்ள அனுபவம் :----.

6.0 கணினித் துறையில் அனுபவம் :----.

7.0 வேறு கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை :----.

8.0 ஆங்கிலமொழித் திறன் :----.

9.0 விண்ணப்பதாரரால் இதற்குமுன்னர் எந்தவொரு குற்றங்களுக்காகவும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டு உள்ளீர்களா? (சரியான அடைப்பில் அடையாளமிடுக.) ஆமெனில், விவரிக்கவும்.

ஆம் : ☐ இல்லை : ☐

..............................................................................................................................
..............................................................................................................................
..............................................................................................................................

10.0 விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் பூரணப்படுத்தப்பட்டு உள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதாகவோ அல்லது பிழையான தகவல்களாகவோ பூர்த்திசெய்யப்படுவதால் எதிர்நோக்கப்படும் நட்டத்தை தாங்குவது தொடர்பில் ஏற்றுகொள்கின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உறுதி செய்கின்றேன்.

(ஆ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதாகவோ அல்லது பிழையான தகவல்களாகவோ பூர்த்தி செய்யப்பட்டால் நியமிக்கப்பட முன்னர் இனங்காணப்பட்டால் நான் தெரிவுசெய்வதில் பொருத்தமற்றவனாவேன் என்பதுடன் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரிந்துகொண்டால் எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்ற நிபந்தனைகளுக்கு கட்டுபட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் கட்டமைப்பு நேர்காணலின் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என உறுதி செய்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்படும் எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல் :

குறித்த பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................... என்ற பெயருள்ள நபரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ...................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை)
திகதி :----.

12.0 திணைக்களத் தலைவரின் / நிறுவனத் தலைவரின் சான்று: (அரசாங்க/ மாகாண அரசாங்கம்/அரச திணைக்களங்களில் பணி புரிவோருக்காக)

குறித்த பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும் இந்த நிறுவனத்தில் பணிபுரியும் திரு./திருமதி/செல்வி ............................. இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .............................பதவியில் சேவை புரிவதாக சான்றுபடுத்து வதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுதலை செய்யமுடியும் என்பதையும் அறியத்தருகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை)
திகதி :----.

11-334

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பாதுகாப்பு அமைச்சு

*பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி - வகுப்பு II இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - 2018*

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி - வகுப்பு II இல் காணப்படும் ஒரு (01) வெற்றிடத்திற்கு இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்ப தாரிகளிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி இணைத்துக்கொள்ளப்பட உள்ளார். இங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் விதிக்கு அமைவாக நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். (இல. 5 இல் குறப்பிடப்பட்ட புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.)

2. **தேவையான தகைமைகள்**.-

(i) *கல்வி/ தொழில் தகைமைகள்* : பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டத்துடன் பட்டப்பின் கல்விப் பட்டம் அல்லது பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல். (உரிய பட்டச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.)

(ii) *அனுபவம்* : இணைந்த சேவைகள் அல்லது அபிவிருத்திச் சேவை உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமான 05 வருடங்களுக்கு குறையாத திறமையான சேவைக் காலத்தை கொண்ட ஆராய்ச்சித் துறையில் அறிவுமிக்க உத்தி யோகத்தராக இருத்தல் (தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பற்றிய காலம், திகதி மற்றும் இறப்பர் முத்திரை இடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(iii) *உடல் நிலைத் தகைமை* : அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத் திலும் சேவை செய்யக்கூடிய உடல் மற்றும் உளநிலைத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகைமைகள்* :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நற்பண்புள்ளவராக இருத்தல்.
* விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் தினத் தன்று பதவிக்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் ;

3. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பன வுக்கு உட்பட்டது. விதவைகள், அநாதைகள் சம்பள முறைமைக்கு உதவு தொகை வழங்கப்படவேண்டும்;

(ii) நியமனமானது 01 வருடம் பதிற் கடமைக்கு உட்பட்டது. இணைத்துக்கொள்ளப்பட்டு 03 வருட காலத்திற்குள் சேர்த்துக்கொள்ளும் விதிகளில் குறிப்பிட்டதற்கமைய முதலாவது தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய அரச நிருவாகச் சேவை சுற்றுநிரூபம் இல. 01/ 2014 இற்கு அமைவாக சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரச கரும மொழிகள் அன்றி ஏனைய மொழிகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் பயில்வு காலத்திற்குள் குறிப்பிட்ட அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்;

(iv) அரச சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை, அரச நிதிக் கோவை மற்றும் அரச திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டது.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- அரச சுற்று நிருபம் 03/ 2016 அமைய MN /6 - 2016 உரித்தான சம்பள அளவுத்திட்டமான ரூபா 36,585 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 65,440 மாதாந்த ஊதியத்தைக் கொண்டது. (2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 03/2016 ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அதன் உபபிரிவு 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

5. நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளி ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டது.

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | உச்ச புள்ளிகள் | தகைமை பெறும் புள்ளி மட்டங்கள் |
|---|---|---|
| சேவை அனுபவம் | 35 | தேவையற்றது |
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | |
| தொழில் அனுபவம் | 20 | |
| மொழி அறிவு | 10 | |
| கணினி அறிவு | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் | 05 | |
| மொத்தம் | 100 | |

6. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்கள் :**

* முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ் களினதும் மூலப்பிரதிகள் மற்றும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
    (1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
    (2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2018.12.09 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 3" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இவ் அறிவித்த லின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரிகள் A4 அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல. 1 முதல் 4.3 வரையிலும் ஏனையவைகளை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தமது கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(iii) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி வகுப்பு II விண்ணப்பித்தல் - மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(iv) தற்போது அரச சேவை மற்றும் மாகாண சேவையில் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.

(v) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத் திற்கு பொருந்தாத விண்ணப்பப் படிவங்கள் நிரா கரிக்கப்படும். முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண் ணப்பப்படிவங்கள் காலதாமதமாதல், காணாமல் போதல் பற்றி எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

8. **பொய்யான தகவல்கள் வழங்குதல்.**– நீங்கள் அனுப்புகின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பொய்யானது அல்லது பிழையானது என இப்பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் நீங்கள் நிராகரிக்கப்படுவீர்கள். இப்பதவிக்கு சேர்த்துக்கொண்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கையோடு அரச சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

9. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

ஆர். பீ. ஆர். ராஜபக்ஷ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,
2018, ஒற்றோபர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - 2018**

1.0 பெயர் :
1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் :-
Mr./Mrs./Miss :----.
(ஆங்கில கெபிட்டல் எழுத்தில்)
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

2.0 2.1 நிரந்தர முகவரி :-
2.2 அலுவலக முகவரி :----.
2.3 தொலைபேசி இல. :----.

3.0 3.1 இனம் : [ ]

(சிங்களம் -1, தமிழ்-2, முஸ்லிம் - 3, ஏனைய - 4)

3.2 பால் :

| ஆண் | | பெண் | |
|---|---|---|---|

3.3 திருமணமானவரா?

| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |
|---|---|---|---|

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

3.5 பிறந்த திகதி : வருடம் :----. மாதம் :----. திகதி :---.

4.0 4.1 கல்வித் தகைமைகள் (உரிய பட்டச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்):

| | சாதாரண/ விசேட பட்டம் | பட்டப்பின் கல்வி/ பட்டப்பின் டிப்ளோமா |
|---|---|---|
| பட்டம் | | |
| பல்கலைக்கழகம்/ நிறுவனம் | | |
| பட்டம் அமுலாகும் திகதி | | |

4.2 ஏனைய கல்வித் தகைமைகள் :----.

4.3 தொழில் தகைமைகள் :

| தற்போதைய தொழில் சேவை | சேவை நிறுவனம் | ஆராய்ச்சி துறையில் சேவைக்காலம் | | |
|---|---|---|---|---|
| | | வருடம் | மாதம் | நாள் |
| | | | | |

4.4 மொழித்தேர்ச்சி : பெற்றுக்கொண்ட உயர்பெறுபேறு

1. சிங்களம் :----.
2. தமிழ் :----.
3. ஆங்கிலம் :----.

4.5 சேவை அனுபவம் :

1. 2017.12.31 ஆந் திகதியன்று சேவைக்காலம் : வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----,
2. 2017.12.31 ஆந் தினத்தை அண்மித்த 05 வருட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுறைகள் சம்பந்தமான விபரங்கள் :----.

5.0 **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானது எனவும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் நிரூபிக்கப்படின் பதவிக்கு தகுதியற்றவராகவும் இப்பதவிக்கு என்னை தெரிவுசெய்த பின்னர் நிரூபிக்கப்படின் எவ்வித இழப்பீடுகளும் செலுத்தாமல் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................... (முழுப்பெயர்) என்பவர் .............. ஆந் திகதி தொடக்கம் இவ் அலுவலகத்தில் சேவையில் உள்ளார் என்றும் 2017.12.31 ஆந் திகதி வரை திருப்திகரமாக 5 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இவ்அலுவலகத்தில் உள்ள அறிக்கையோடு ஒப்பிட்டு நான் தனிப்பட்ட வகையில் பரிசோதித்தேன் எனவும் இவரின் வருகை மற்றும் நடத்தை ............... எனவும், இக்காலப்பகுதிக்குள் எவ்விதமான தவறுகளுக்காகவும் (எச்சரிக்கை விடுத்தல் தவிர) தண்டனை பெறாதவர் எனவும் ...................... திகதி இவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன் தற்போதைய சேவையிலிருந்து இவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(இறப்பர் முத்திரையிட்டு உறுதிப்படுத்தவேண்டும்)
திகதி :----.

11-521/1

## பாதுகாப்பு அமைச்சு

### பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு திறந்த ஆட்சேர்ப்பு - 2018

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இல் காணப்படும் 10 வெற்றிடங்களுக்கு இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமையைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் பாதுகாப்பு அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் எனவும், அப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மிகச் சிறந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் பதவி வெற்றிட எண்ணிக்கை அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர். இங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் ஒழுங்கிற்கு அமைவாக நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். தீர்மானத்திற்கு அமைவாக (இல. 6 இல் குறப்பிடப்பட்ட).

2. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 03/ 2016 MN / 6 - 2016 இற்கு உரித்தான சம்பள அளவுத்திட்டமான ரூபா 36,585 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 65,440 மாதாந்த ஊதியத்தைக் கொண்டது. (சம்பளமானது 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 03/ 2016 ஒழுங்குவிதிகளின் படி 11 உப அட்டவணையின்படி ஊதியம் வழங்கப்படும்.)

3. இப்பதவியானது நிரந்தரமான மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமாக அரசின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

4. **தேவையான தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 21 வயதிற்குக் குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

(i) *கல்வி/தொழில் தகைமைகள்*.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டத்துடன் பட்டப்பின் கல்விப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (உரிய பட்டச் சான்றிதழ் இணைக்கவும்.)

(ii) *உடல்நிலைத் தகைமை*.- அனைத்து விண் ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் மற்றும் உளநிலைத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள்*.- விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று விண் ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்வதற்கான அனைத்து தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

5. **நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவியானது 3 வருட கால தகுதிகாண் காலத்தைக் கொண்டது. ஆராய்ச்சி அதிகாரி II வகுப்பிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்பு சுற்றுநிருபத்திற்கு அமைவாக முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ;

(ii) 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சேவை சுற்று நிருபம் இல. 01/ 2014 இற்கு அமைவாக சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரச கரும மொழிகள் அன்றி ஏனைய மொழிகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்திற்குள் குறிப்பிட்ட அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ;

(iii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சட்டதிட்டங் களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை, அரச நிதிக் கோவை மற்றும் அரச திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டது.

6. **பரீட்சை ஒழுங்குகள்**.- இந்தப் பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டது. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்பட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

பரீட்சைக்குப் பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப் படும் :

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *புள்ளி கள்* | *தகைமை பெறும் புள்ளி மட்டம்* |
|---|---|---|---|
| பொது விவேகம் | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| குறிப்பிட்ட பதவியுடன் தொடர்புபட்ட அறிவு | 2 மணித்தியாலம் | 100 | 40% |

***பொது விவேகம்.-*** எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள் தொடர்புகளுடனான சிக்கல்கள் சம்பந்தமான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியிலான விளக்கம், பொருள்கோடல் ஆற்றல், நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

***குறிப்பிட்ட பதவியுடன் தொடர்புபட்ட அறிவு.-*** இலங்கை மற்றும் உலக பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு, சர்வதேச தொடர்புகள், முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சூழல் மற்றும் கலாச்சாரம் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுதல்.

***பரீட்சைக் கட்டணம்.-*** பரீட்சைக் கட்டணம் 1,000.00 ரூபா திருப்பிக் கொடுக்கப்படாத இக்கட்டணத்தை இலங்கை வங்கி தப்ரபேன் கிளை பாதுகாப்பு அமைச்சின் கிளை, இலக்கம் 0007040119 என்ற கணக்கிற்கு இலங்கையில் எப்பாகத்திலும் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் வைப்பிலிட முடியும். பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயன்தரும். எக்காரணம் கொண்டும் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நேர்முகப் பரீட்சையில் கீழ்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப் படும் துறைகள் | உச்ச புள்ளிகள் | தகைமை பெறும் புள்ளி மட்டங்கள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | 50% |
| பதவிக்குரிய தொழில் தகைமைகள் | 15 | |
| தொழில் அனுபவம் | 35 | |
| கணினி அறிவு | 15 | |
| மொழி அறிவு | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரியின் அடையாளப்படுத்தல்கள் :**

* எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ் களினதும் மூலப்பிரதிகள் மற்றும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

* விண்ணப்பதாரிகள் தமது அடையாளத்தை உறுதிப் படுத்துமுகமாக நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2018.12.09 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/ 5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 3" எனும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரிகள் A4 அளவுள்ள தாளைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல. 1 முதல் 2.6 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் இல. 3.0 இல் இருந்து 5.0 வரையிலும் ஏனையவைகளை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு தமது கையெழுத்தில் அது பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(iii) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி வகுப்பு II திறந்த ஆட்சேர்ப்பு" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(iv) தற்போது அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும்.

(v) இம்மாதிரி விண்ணப்பத்திற்கு முரணான விண் ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்படும் காலதாமதங்கள், காணாமல் போகுதல் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் வழங்குதல்.**- நீங்கள் அனுப்பு கின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என இப்பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் நீங்கள் நிராகரிக்கப்படுவீர்கள். இப்பதவிக்கு சேர்த்துக்கொண்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கையோடு அரச சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

10. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,
2018, ஒற்றோபர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு திறந்த ஆட்சேர்ப்பு - 2018**

| |
|---|
| பரீட்சை எண் :----. (அலுவலக உபயோகத்திற்கு) |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி : சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 [ ] (குறிப்பிட்ட இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.) பரீட்சைக்கு தோற்றும் மொழி பின்னர் மாற்றம் செய்ய இயலாது. |

1. பெயர் :
   1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----. (உதாரணம் : HERATH MUDIYANSELAGE BUDDHIKA SAMPATH KUMARA GUNAWARDANA)
   1.2 இறுதியாக வரும் பெயர் ஆரம்பத்திலும் ஏனைய பெயர்ளின் முதல் எழுத்துக்களுடன் பெயர் :----. (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) (உதாரணம் : GUNAWARDANA H. M. B. S. K.)
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.
   1.4 இனம் : [ ] (சிங்களவர்-1, தமிழர்-2, முஸ்லிம்கள்-3, ஏனைய-4) (குறிப்பிட்ட இலக்கத்தை கூட்டினுள் இடுக.)
   1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

   1.6 பால் : [ ]
   ஆண்-1 பெண்-2
   (குறிப்பிட்ட இலக்கத்தை கூட்டினுள் இடுக.)
2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
   2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
   2.3 அலுவலக முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
   2.4 அலுவலக முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
   2.5 நுழைவுப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
   2.6 தொலைபேசி இலக்கம் :----.
3. 3.1 திருமணமானவரா /திருமணமாகதவரா திருமணமானவர்-1 திருமணமாகாதவர்-2 [ ] (குறிப்பிட்ட இலக்கத்தை கூட்டினுள் இடுக.)
   3.2 பிறந்த திகதி : வருடம் :----. மாதம்:----. திகதி :----.
   3.3 2018.12.09 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள்:----.
4. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :
   4.1 முதல் பட்டம் (உரிய பட்டச் சான்றிதழை இணைக்கவும்):
   4.1.1 பட்டம் :----.
   4.1.2 உள்வாரி/வெளிவாரி :----.
   4.1.3 பாடங்கள் :----.
   4.1.4 பட்டம் பெற்ற வருடம் :----.
   4.1.5 பல்கலைக்கழகம் :----.
   4.2 பட்டப்பின் கல்விப் பட்டம் (உரிய பட்டச் சான்றிதழை இணைக்கவும் :

| பட்டம் | பாடங்கள்/துறைகள் | பெறுபேறு நிலை | வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

   4.3 கணினி அறிவு :

| பாடநெறி | காலம் | நிலையம் | வருடம் |
|---|---|---|---|
| | | | |

   4.4 ஆங்கில மொழி அறிவு (பாடநெறி பற்றிக் குறிப்பிடவும்) :----.
   4.5 குறிப்பிட்ட துறை சம்பந்தமான தொழில் அனுபவம் :

| கற்கைநெறி | காலம் | நிலையம் | வருடம் |
|---|---|---|---|
| | | | |

5. சேவை அனுபவம் :

| பதவி நிலை | நிறுவனம்/பிரிவு | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் :

(1) பணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை :----.
திகதி :----.

(2) செலுத்தப்பட்ட பணம் ரூபா ----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். (பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.) |

விண்ணப்பதாரியின் உறுதியுரை:
மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டியவகையில் உண்மையானதென்றும் சரியானவையென்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இதில் ஒட்டி யுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கும் சட்டங்களுக்கும் அமைய நான் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சை யின் முன்னர் அல்லது பரீட்சையின்போது தகுதி இழக்கப்படுவதற்கான தீர்மானத்திற்கு உடன்படு கின்றேன். பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கும் சட்டங் களுக்கும் கட்டுப்படுவேன் என தெரிவிக்கின்றேன்.

(உறுதிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பம் இடப்பட வேண்டும்.)

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................... என்பவர் .............. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், அவர் பரீட்சைக்கான சரியான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

1. உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
2. பதவி :----.
3. முகவரி :----. (இறப்பர் முத்திரை)
4. திகதி :----.

8. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
(அரச சேவை/ மாகாண அரச சேவை அல்லது அரச கூட்டுத்தாபனத்தில், சேவைபுரியும் உத்தியோகத்தர்கள் மாத்திரம்) இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................. என்பவர் .............. .................. (பதவி) நிறுவனத்தில் சேவையில் உள்ளார் எனவும், அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(இறப்பர் முத்திரை)
திகதி :----.

11-521/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.